அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

தீபம் 10 நெறி 4 சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்கள் இதழ் விலை ₹1 நவம்பர் 2019




எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!




## வாயாற வாழ்த்துகிறோம்


அறக்கட்டளையின் அறப்பணிகளுக்கு
மாதந்தோறும் ஆயிரமாயிரம்
பொற்காசுகளை அள்ளிக் கொடுக்கும்
அருளாளர் தயவுமிகு
திரு. **G. ரமணி**
தம்பதிகளை
தீபம் வாயாற வாழ்த்தி மகிழ்கிறது.

## தொண்டிற்கு தலை வணங்குகிறோம்

பட்டினத்தார் வழி வந்த, நித்ய
தருமச்சாலையில் தங்கி, அற்புதமான
முழுநேர தொண்டு செய்யும்
திரு. **B. பிரம்மீஸன்**
அவர்களின் தொண்டிற்கு
தலை வணங்குகிறோம்.




## " தீபநெறி " ஆசிரியர் குழு


**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைபேசி : 95518 49757



**செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைபேசி : 98659 39896



**பொதிகைபிரியன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கள்ளக்குறிச்சி
கைபேசி : 97897 88198



**அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைபேசி : 80564 38488



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைபேசி : 94440 73635



**ஜோதி சதுரகிரியார்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
வேளச்சேரி, சென்னை.
கைபேசி : 97894 94009




# தீபநெறி தொண்டர்களின் தினசரி தியானம்

ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்






1. அறியாமை அடியோடு அகலட்டும்!
2. ஆன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்!
3. இல்லாமை இல்லாமல் புதையட்டும்!
4. ஈவது இயல்பாய் இருக்கட்டும்!
5. உயிரிரக்கம் எங்கும் தழைக்கட்டும் !
6. ஊக்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!
7. எல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!
8. ஏற்றத்தாழ்வு இடருற்றுப் போகட்டும்!
9. ஐம்பூதங்கள் மாசுபடுவதைத் தடுக்கட்டும்!
10. ஒன்றே இறையென உணர்த்தட்டும்!
11. ஓயாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!
12. ஔடதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!**

நித்ய தீப தருமச்சாலை வளாகம் எண்.7/8 புத்தேரிக்கரை தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி, சென்னை– 600 042.

**எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
முழுவகைகாட்டி முயங்கிய பொன்னே (1366)**

# வேதமும் சன்மார்க்கமும்

திருவருட்பிரகாசர் என்னும் இராமலிங்கப் பெருமானார் ஷண்மதங்களையும் பாடியிருக்கிறார். சன்மார்க்கம் என்பதை தொடங்கியபோது சமரச வேத சன்மார்க்கம், ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கம், சுத்த வேதாந்த சித்தாந்த அந்தாந்தமாகிய சமரச சுத்த சன்மார்க்கமே நித்தியமார்க்கம், சமரச வேத பாடசாலை போன்றவை உரைநடையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் சமயசன்மார்க்கம் என்பது – சத்துவகுணஇலட்சியமுள்ளது. சத்துவகுண சம்பந்தமுள்ள சேர்க்கை எல்லாம் சன்மார்க்கமே என்கிறார். சத்துவத்துடன் எவையெல்லாம் சம்பந்தமுள்ளவை எனப்பார்த்தால் சத்போதம், சத்கருமம், சத்சங்கம், சத்காலம், சத்விகாரம், சத்பாத்திரம், சத்ஜனம், சத்செய்கை போன்றவையாகும். சத்துவகுணம் என்பது எந்த இயல்பாயிருக்கும் எனில் கொல்லாமை, சாந்தம், அடக்கம், பொறுமை, புலனடக்கம், ஜீவகாருண்யம் போன்றவையாயிருக்கும்!

**சத்மார்க்கம்**

எக்காலத்தும் எவ்வகை தடைகளுமின்றி அழியாத சுத்த பிரணவ ஞான தேகமென்கிற முத்தேக சித்தியும் எல்லாம்வல்ல சுவசித்தியும் பெற்றுக்கொள்வதாகும்!

**விண்ணப்பங்கள்**

பக்கம் 569 / 70 : "இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும், போது போக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும், அறிவதற்கும் மிகவும் இலேசு உடையதாய், பாடுதற்கும், துதித்தற்கும் மிகவும் இனிமை உடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய் திருவருள் பலத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளால் பல்வகை தோத்திரப் பாடல்களைப் பாடுவித்து அருளினீர்..." என எழுதுகிறார்.

"சாகாக் கல்வி" என்பது ஆரிய மொழியில் இருக்கிறதா? அதைப் பற்றி அம்மொழியில் எந்தளவுக்கு எந்த முயற்சியால் அந்த நிலை அடையக்கூடும், அதற்கு வழி என்ன? எனும்போது யஜீர் வேதத்தில் பிருஹத் ஆரண்யகா உபநிஷத்தில் சாந்தி மந்திரம் என்ற ஒன்று சஹனாவவது... என்று ஆரம்பிக்கும் ஸ்லோகத்தின் முடிவாக

அசதோ மா சத்கமயா
தமசோமா ஜோதிர் கமயா
ம்ருத்யோர் மா அமிர்தம் கமயா

என்ற வரிகள் குறிப்பிடுவது என்ன?

அ – சத்தாய் (அறியாமை) இருக்கும் என்னை அறிவுள்ளவனாக ஆக்கு! தாமச குணத்தில் இருக்கும் எனக்கு ஒளிகாட்டு ! மரணத்தை தவிர்க்கும் அமுதத்தை எனக்குக் கொடு, அமைதி, சாந்தம், சமாதானம் நிலவட்டும் என்பதாக இருக்கின்றன.

இக்கட்டுரையின் முதல் பத்தியில் பார்த்த "வேதம்" என்ற வார்த்தையை (பக்கம் 547) சமரசவேதபாடசாலை 11.1.1872 என்ற அறிவிப்பை வெளியிடும் வரை கூடக் காணமுடிகிறது. "சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய் தென்மொழி உள்ளது" என்பதையும் எழுதியவர். சத்து+மார்க்கமே சன்மார்க்கம், சத்துவகுணம் என்பது தினமும் உருவாகிக் கொண்டும், பெருகிக் கொண்டும் இருக்கின்ற நமது வினைகளின் கனியை நாம் அடைதலேயாகும். அந்த மார்க்கம் காட்டும் வழியில் நாம் ஞானம், அருள், தவம், பொறுமை, வாய்மை, மேன்மை, மௌனம், புலனடக்கம், உண்மை, நற்குணம், நேர்மை, கொள்கை பிடிப்பு இருப்பதை உணரலாம்.


நாம் மேலே கண்ட சாந்தி மந்திரத்தில் "சத்து" என்ற வார்த்தையைப் பார்க்கும்போது – அதன் ஆணிவேரான ஜீவகாருண்யம் என்று பெருமானார் சொல்லியது இருந்திருக்குமேயானால் – "எனக்கு இறவாமை பெறுவதற்காக அமுதத்தைக் கொடு" என தனியாகக் கேட்டிருக்க வேண்டாம். பாற்கடலில் கடைந்து பெற்ற அமுதம் தான் இங்கே கேட்கப்பட்டிருக்கிறது! அப்படியொன்று இப்போது எப்படி கிடைக்கும்? "மடலெலாம் மூளைமலர்ந்திட அமுதம் உடலெலாம் ஓடி நிரம்பிட" என்பாரே வள்ளலார் அந்த அமுதம் பிறர் கொடுத்து வருமா? எனவே என்றும் நிலைத்து (permanent) உள்ள சத்து என்பதை அகவலில்,

என்றும் ஓர் நிலையாய் என்றும் ஓர் இயலாய்
என்றும் உள் ஏதுவாம் என்தனிச் சத்தே
பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுஎனற்கு அரிதாம் என்தனிச் சத்தே
ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே
துரியமும் கடந்ததோர் பெரியவான் பொருள்என
உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச்சத்தே
அன்றதன் அப்பால் அதன்பரத்து அதுதான்
என்றிட நிறைந்த என் தனிச்சத்தே

எனச் சொல்லி வேதம் என்பது நெருங்க முடியாத ஒன்று தான் "சத்து" என்றும் – "நீண்ட மறைகள் ஆகமங்கள் நெடுநாள் முயன்று வருந்தி நின்று வேண்ட அவைகட்கு ஒரு சிறிதும் விளங்கக்காட்டாது" என அடைக்கலப் பதிகத்தில் பாடியதும் நமக்கு எதைத் தெளிவுபடுத்துகிறது?

"அமுதம்" அருந்தினால் சாகமாட்டோம் என்பது மட்டுமே வள்ளலார் காலம் வரை சொல்லப்பட்ட கருத்து. அந்த சாகாநிலை அடைந்தாலும் அது 14 ஆம் நிலைதான். அதற்கு மேலும் தத்துவ நிக்ரஹம், அம்மயமாதல் என்னும் 15, 16 ஆம் நிலை தெரிந்தாரில்லை, வள்ளலார் மட்டுமே அடைந்தார், அதை மனிதகுலத்துக்கும் சொன்னார். சாகாக்கல்வியின் தரமெலாம் உணர்த்தி, சாகாவரத்தையும் தந்து, மென்மேலும் ஒருருவாக்கி யான் உன்னிய படியெலாம் – சீர் உறச் செய்து – உயிர் திறம் பெற – அழியா அருளமுது அளித்தனை – அருள்நிலை ஏற்றினை – அருள் அறிவு அளித்தனை – இலகும் ஐந்தொழிலையும் யாம் செயத்தந்தனை – இதுவல்லவோ சத்து! இது தான் சத்து!

இவைகளெல்லாம் – வேதத்திற்கு தெரியாது – அதை இயற்றியவருக்கும் தெரியாது – அதற்கு சாட்சிதானோ என்னவோ "தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற வரியை அந்த வேதமியற்றிய மண்ணிலிருந்து வந்தவரும் தெளிவாக விளக்கமாகச் சொன்னதே வேதமும் சன்மார்க்கமும்!



K.N. உமாபதி
K.K. நகர், சென்னை
95518 49757

**எண்ணியபடி எலாம் இயற்றுக என்றெனைப்**
**புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே (1368)**

# நடமாடும் நித்ய அன்ன தருமச்சாலை



தீபம் அறக்கட்டளையின் நித்ய அன்ன தருமச்சாலை வளாகத்தில்
தினசரி நூற்றுக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுவிக்கும் அற்புத காட்சி.



தீபம் அறக்கட்டளையின் சார்பில் நடமாடும் நித்ய அன்ன தருமச்சாலை மூலம் தினசரி பசியாற்றுவித்தல்

**ஊழிதோ றூழி உலப்புறாது ஓங்கி
வாழிஎன்று எனக்கு வாய்த்த நன்னிதியே (1370)**

# ஆன்மாக்களின் வாழ்க்கை !

ஆன்மா என்பது அருள் பெறாத சிற்றணு வடிவமானது. ஆனாலும் அவை கோடி சூரிய பிரகாச ஒளித் தன்மை உடையது. அந்த ஆன்மா இருந்த இடம்... அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் இருக்கும் இடமான அருட்பெருவெளி என்ற இடத்தின் ஒரு பகுதியில் ஆன்மாக்கள் நிறைந்து சூழ்ந்து இருக்கும். ஆன்மாக்கள் இருக்கும் இடத்திற்கு ஆன்ம ஆகாயம் என்று பெயர். அந்த இடத்தில் தான் ஆன்மாக்கள் நீக்கமற நிறைந்து இருக்கின்றன. அருள் நிறைந்த பெருவெளி என்னும் இடத்தில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்

**இயற்கை உண்மை, இயற்கை விளக்கம், இயற்கை இன்பம்**

போன்ற இயற்கையான மூன்று விதமான ஆற்றல்களை தன்வசமாக வைத்துக்கொண்டு இருப்பதால் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்னும் பெயர் பெற்றுள்ளார். அளவில் அடங்காத அருள்பெரும் ஆற்றல் நிறைந்த தன்மைகளைக் கொண்டவர். அவர் ஒருவரே! பலகோடி அண்டங்களையும் உலகங்களையும் படைத்தவரும் அவரே.

பலகோடி அண்டங்களையும் உலகங்களையும் படைத்ததின் நோக்கம் அதன் காரணம் காரியம் தெரிந்து கொண்டால் மட்டுமே உண்மை விளங்கும்.

ஆன்மாக்கள் வாழ்வதற்கும் அருளைப் பெறுவதற்கும் தேவையான வசதி வாய்ப்புக்கள் வேண்டும் என்பதற்காகவே பஞ்ச பூத உலகம் படைக்கப்பட்டதாகும்! அதற்கு காரிய காரண பஞ்சபூத உலகம் என்று பெயர்.

ஆன்மாக்கள் அருளைப் பெற வேண்டிய அவசியம் ஏன்? என்ற உண்மையைத் தெரிந்து கொண்டால் நாம் யார் என்ற உண்மை விளங்கும்.

ஒரு உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும் ! ஆன்மாக்கள் எங்கு இருந்தன என்பதை மேலே தெரிவித்து உள்ளோம்.

அந்த ஆன்மாக்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருட்பெரு வெளியில் அருகில் இருந்தும் ஆன்மாக்கள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைக் காண்பதற்கும் தொடர்பு கொள்வதற்கும் வாய்ப்புகளே இல்லை.

அந்த ஆன்மாக்கள் தன் தந்தையாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் அருளைப் பெற்றால் தான் தொடர்பு கொள்ள முடியும். அருளைப் பெறுவதற்கும் பேரின்பசித்திப் பெருவாழ்வு பெற்று வாழ்வதற்கும் உயர்ந்த அறிவுள்ள மனிததேகம் அவசியம் தேவைப்படுகின்றது. ஆன்மாக்களின் பூலோக வாழ்க்கை!

ஆன்மாக்கள் முதிர்ச்சியும், அறிவும் அனுபவமும் பெற்றுக்கொள்ள, தாவரம், ஊர்வன, பறப்பன, நடப்பன, அசுரர், தேவர், மனிதர் என ஏழு பிறப்பு எடுக்க பஞ்சபூத உலகில் வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

ஆன்மாக்கள் பஞ்ச பூத உலகில் வந்து உயிர் பெற்று உடம்பு எடுத்து, ஏழு பிறப்பிலும் தேர்ச்சி பெற்று, இறுதியான மனிதப்பிறப்பில், இன்பம் துன்பம் அனுபவித்து, அதாவது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் நான்கு காலங்களில் அனுபவித்து பின்பு பற்று அற விட்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத் தொடர்பு கொண்டு அருளைப் பெற்றால்தான் ஆன்மாக்கள் அருட்பெருஞ்ஜோதியைத் தொடர்பு கொண்டு அதன் மயமாக மாற முடியும்.

ஆன்மாக்கள் உயிர் உடம்பை அருளின் வல்லபத்தால் அருள்ஒளி உடம்பாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் மட்டுமே அருள் வழங்கும் தகுதி உடையவர். இந்த உண்மை தெரியாமல் சமய மதவாதிகள் தவறான தத்துவக் கடவுள்களான உருவங்களைப் படைத்து சரியை. கிரியை. யோகம் போன்ற பக்தி என்னும் குறுக்கு வழியைக் காட்டி ஆன்மாக்களை அலைய விட்டு விட்டார்கள். ஆன்மாக்களுக்கு ஞானம் என்னும் அறிவு அருள் வழியைக் காட்டவில்லை, காண்பதற்கு உண்டான அருளை அவர்களால் பெறமுடியவில்லை.

ஆன்மாக்களுக்கு சொர்க்கம், நரகம், கைலாயம், வைகுண்டம், முத்தி பரலோகம், போன்ற பதப்பிராப்திகள் எதுவும் வேண்டியதில்லை. இவைகள் எல்லாம் மனித உடம்பிலே உள்ளன.

ஆன்மாக்கள் முக்கியமாக அவசியம் பெற வேண்டியது. எல்லாம்வல்ல தனித்தலைமை பெரும்பதியாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் முழுமையான அருளைப் பெறுதலே அதன் முக்கிய கடமையாகும் கட்டளையாகும். அதுவே இயற்கையின் சட்டமாகும்.

ஆன்மாக்களுக்கு உண்மையான நேர் வழிக் காட்டவே ஒரு பக்குவமுள்ள ஆன்மா இங்கு வருகின்றது.

அந்த பக்குவம் உள்ள ஆன்மாவைத் தேர்வு செய்து உலகிற்கு அனுப்பி வைத்தவர்தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

இந்த பஞ்சபூத உலகிற்கு வந்த அந்த பக்குவ ஆன்மா அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சொல்லிய வண்ணம் பஞ்சபூத உடம்பை எடுத்து, வாழ்ந்து, அருளைப் பெற்று, பஞ்ச பூத உடம்பை, அருள் நிறம்பிய ஒளி உடம்பாக மாற்றி, மரணத்தை வென்று இறைவனிடம் தொடர்பு கொண்டு இறை நிலையை அடைந்த அந்த ஆன்மாவின் பெயர்தான் உலகியலில் வைத்த பெயர் இராமலிங்கம் என்பதாகும்.

அருள்பெற்று மரணத்தை வென்ற பின் திருஅருட்பிரகாச வள்ளலார் என்ற பெயர் சூட்டப்பட்டதாகும். அவரைப்போல் ஆன்மாக்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து அருளைப் பெற்று கடவுள் நிலை அறிந்து அம்மயமாவதற்காகவே ஆன்மாக்களை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பஞ்சபூத உலகிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஆன்மாக்கள் இந்த உலகத்தை விட்டு வெளியே செல்வது எங்ஙனம்? இந்த உலகம் ஒரு கோழிமுட்டை வடிவமானது. பலகோடி மைல் வேகத்தில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டுள்ளது. அதேபோல் தான் ஆன்மா இந்த பூத உடம்பை இயக்கிக் கொண்டு உள்ளன. இந்த அண்டத்திற்குள் வால் அணு, திரவ அணு, குரு அணு, லகு அணு, அணு, பரமாணு, விபு அணு என ஏழு விதமான அணுக்கள் அனந்தவண்ண பேதமாய் நிறைந்துள்ளது.

சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் போன்ற கிரகங்கள் அனைத்தும் தன்னைத்தானே தன் கடமைகளை ஆற்றிக்கொண்டுள்ளன. எல்லாமே ஐந்து வண்ண ஒளித்தன்மை உடையதாகும்.

இந்த அணுக்களின் பல வகையான ஒளி வண்ணத்தின் தொடர்பால் எல்லா ஆன்மாக்களுக்கும் தன் தகுதிற்கு தகுந்தவாறு உயிர். உடல் தோற்றம் பல வண்ணங்களாக, பல வடிவங்களாக பின்னப்பட்டுள்ளன.

ஆன்மா உயிர் இரண்டும் ஒளித்தன்மை உடையன. ஆன்மா குடியிருக்கும் வீடு என்னும் உடம்பு மட்டும் அணுக்களின் சேர்க்கைக்கு தக்கவாறு உரு மாற்றங்கள் வெவ்வேறு விதமான வண்ண வடிவங்களுடன் படைக்கப்படுகின்றன.

உயர்ந்த அறிவு ! இந்த உலகத்தில் உயர்ந்த இறுதிப் பிறப்பான மனித தேகத்திற்கு மட்டுமே உயர்ந்த அறிவு வழங்கப்பட்டுள்ளது.

**இதமுற ஊழிதோறு எடுத்தெடுத்து உலகோர்க்கு**
**உதவினும் உலவாது ஓங்கு நன்னிதியே (1372)**

எதற்காக உயர்ந்த அறிவு கொடுக்கப்பட்டது ஏனென்றால், உண்மையை அறிவால் அறிந்து அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத் தொடர்பு கொண்டு தன்னை உணர்ந்து. தன் தலைவனை அறிந்த அருளைப் பெற்று மரணத்தை வென்று இறைநிலையை அடைய வேண்டும் என்பதற்காகவே உயர்ந்த அறிவுள்ள மனித தேகம் கொடுக்கப்பட்டது.

கோடி சூரியப் பிரகாசம் உஷ்ணம் உள்ள ஆன்மா.. அருள் பிரகாசமாக மாற்றம் அடைய வேண்டும். அதற்கு அருள் சுதந்திரம் பெற வேண்டும். கருணையின் மொத்த உருவமே அருள் பிரகாசமாகும். அதனால் தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தனிப்பெருங்கருணை வாய்ந்தவர் என்று சொல்லப்படுகின்றது.

ஆன்மாக்கள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைத் தொடர்பு கொள்ள அதன் தன்மையாகத் தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும்.

எவ்வாறு மாற்றிக் கொள்வது ? இந்த உண்மையைத் தான் வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க சத்திய விண்ணப்பத்தில் நமக்குத் தெரிவிக்கின்றார். கவனமாகப் படித்து உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்!

**சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் !** உத்தர ஞான சித்திபுரம் என்றும் உத்தர ஞான சிதம்பரம் என்றும் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும். பார்வதிபுரம் என்றும் வடலூர் என்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப் பதியினிடத்தே, இயற்கை உண்மை நிறைவாகியுள்ள ஒரு சுத்த சிவானுபவ ஞானசபையில்.

இயற்கை உண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து, இயற்கை இன்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!

தேவரீரது திருவருட் சமூகத்தில் யான் செய்து கொள்ளும் சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம் ! இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடையத்தாகிய தேகத்தைப் பெற்ற யான் இத் தேகத்தில் இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தித்து இத் தேகத்தையே நித்திய தேகமாகிக்கொண்டு எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டும் என்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்பமுயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக. அவத்தைகள் எல்லாவற்றையும் நீக்கி இத்தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனால் பெறுதல் கூடும் என்று அறியத்தொடங்கிய தருணத்து

வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது. எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்திரம் ஒன்றாலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

பின்னர். திருவருட்சுதந்திரம் நமக்கு எந்த வழியால் கிடைக்கும் என்று அறியத் தொடங்கிய தருணத்து, எனது யான் என்னும் தேகசுதந்திரம், போகசுதந்திரம், ஜீவசுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்கும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

ஆதலில், எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும், போக சுதந்தரத்தையும், ஜீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்துவிட்டேன். கொடுத்த தருணத்தே இத்தேகமும் ஜீவனும் போகப்பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது.

தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

இத் தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும். தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம் ! வந்தனம் ! மேலே கண்ட விண்ணப்பத்தில் கண்டபடி, இந்த உலகத்தில் நாம் வாழ்வதற்கு கொடுத்த சுதந்தரத்தினால் பிணி, மூப்பு, பயம், துன்பம், மரணம் போன்ற அவத்தைகள் வந்து இறந்து இறந்து பிறந்து பிறந்து கொண்டே இருக்க வேண்டும் என்ற உண்மையை அறிந்து கொண்டேன்.

எனவே, நமக்கு இறைவனால் கிடைத்த தேகசுதந்திரம், போக சுதந்திரம், ஜீவசுதந்திரம் என்னும் மூவகை சுதந்திரத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் திருவருட் சுதந்திரம் பெற்றால் மட்டுமே மரணத்தை வென்று என்றும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வு ஆன்மாக்கள் வாழமுடியும்.

இதுவே ஆன்மாக்களின் இயற்கை உண்மை வாழ்க்கையாகும். பொய்யை ஒழித்து மெய்யை உணர்ந்து வாழ்வோம். பொய்யை ஒழித்து புறப்பட்டேன் மற்றாடும் ஐயரைக் கண்டேனடி என்று வள்ளலார் அழுத்தமாகச் சொல்லி உள்ளார்.

ஆன்மாக்கள் பூத தேகத்தை விட்டு அருள் தேகத்தைப் பெற்றால் மட்டுமே இந்த உலகத்தை விட்டு வெளியே செல்லமுடியும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அருள் கண்களால் காணமுடியும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அனுமதி அளித்தால் மட்டுமே. அண்டகோடிகள் எல்லாம் ஊடுருவி செல்லும் ஆற்றல் ஆன்மாவிற்கு கிடைக்கும். வேறு எந்த வழியாலும் செல்ல வாய்ப்பே இல்லை.

வள்ளலார் பாடல்!

அண்ட கோடி அனைத்தும் காணுங் கண்கள் எய்தியே
அறிந்தேன் அங்கைக் கனிபோல் அவற்றில் உள்ள செய்தியே
பிண்ட கோடி முழுதும் காணப் பெற்று நின்னையே
பேசிப் பேசி வியக்கின்றேன் இப்பிறவி தன்னையே!

என்னும் பாடலிலே தான் கண்ட காட்சியைத் தெளிவாக விளக்குகிறார் வள்ளலார். மேலும் நம்மை அன்புடன் அழைக்கின்றார்.

வள்ளலார் பாடல்!

இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்
எல்லாம் செய் வல்ல சித்தி இறைமையும் பெற்றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரச சன்மார்க்கம்
அடைந்திடுமின் அகவழவு இங்கு அனக வழிவாகிப்
பொன்புடை நன்கொளிர் ஒளியே புத்தமுதே ஞான பூரணமே
ஆரணத்தின் பொருள் முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற் கரிதாம் மணியே சிற்சபையின் மாமருந்தே
என்று உரைமின் தீமை எலாம் தவிர்த்தே!

என்னும் ஞானசரியை பாடலிலே எளிய தமிழில் தெளிவாக விளக்கம் தந்து உள்ளார். சாதி சமய மதம் போன்ற தடைகளை தவிர்ப்போம். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் மெய்வழியை பின்பற்றுவோம்.

எல்லா ஆன்மாக்களும் இன்புற்று வாழ்க !
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
கொல்லா நெறியே உலகம் எல்லாம் ஓங்குக !



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

**இருநிதி எழுநிதி இயல்நவ நிதிமுதல்
திருநிதி எல்லாம் தரும்ஒரு நிதியே (1374)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் மாதந்தோறும் வடலூர் சத்திய தருமச்சாலையில் 74-வது மாதங்களாக தொண்டாற்றும் தீபத்தின் தன்னிகரில்லா ஆடுகின்ற சேவடிகள்.**











**எவ்வகை நிதிகளும் இந்தமா நிதியிடை**
**அவ்வகை கிடைக்கும் என்று அருளிய நிதியே (1376)**

# என்ன? ஏன்? யார்?
# எங்கே? எப்படி? எப்போது?

என்ன? என வினவும் கேள்விதான் அறிவுத் திருக்கோயில் கோபுர வாயிலின் திறவுகோல்.

வினாக்களை எழுப்பு - விடைகளைப் பெறு என அறிவுறுத்தியமைக்காகவே, கிரேக்க ஞானி சாக்ரடீஸுக்கு விஷம் அருந்திடும் தண்டனை அளிக்கப்பட்டது. விஷம் அருந்தி மாண்டார். ஆனால் 2500 ஆண்டுகட்கு பின்னர், இன்றும் அவர் பேசப்படுகிறார்.

இதே போன்று வினாக்களை எழுப்பி. விடைகாண வாலறிவன் நற்றாளை தொழுதிடும் வல்லுநர் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அன்று விஷம் இன்று துப்பாக்கி சூடு. வினா எழுப்புதல் தவறான செயலா? வினாக்கள் தவறானவைகளாக இருந்தால் கூட விடைகாண விழைவது தான் விவேகம். அறிவு வளர, அறிவு தழைத்திட வினாக்கள் அடிப்படைத் தேவை. “என்ன?” எனும் வினாவிற்கு அவசியம் என்ன? அர்த்தம் என்ன? என கேட்கத் தோன்றுகிறதல்லவா? நம் அனைவர்க்கும் எண்ணம் உதிக்கின்றது இதுதானே முதல் நிலை. அனைவருக்கும் பொதுவான அனுபவம் அல்லவா? எண்ணம் எத்தகையது என புரிந்து கொள்ள முயல்கிறோமா? புரிந்தபின் பேசுகிறோமா? பல நேரங்களில் புரிந்து கொள்ளாமல் பேசுகிறோம் – விவாதிக்கிறோம் – செயல்படுகிறோம். பயனிலபேசி, பயனில செய்து – பயனற்ற வாழ்வைத் தொடர்கிறோம்.

அரியவை அனைத்தும் வெளிச்சத்திற்கு வந்தன மனிதன் இந்த சூத்திரத்தை பயன்படுத்தியதால்தானே! அறியாமை இருள் அகன்றிட பயன்படுத்தப்பட வேண்டிய அருமையான சூத்திரம் – “என்ன? ஏன்? யார்? எங்கே? எப்படி? எப்போது?” இன்னும் பயன்படுத்தப்படாமல், ஒவ்வொரு மனிதனிடமும் வீணாகிக் கொண்டிருக்கிற 80 சதவிகித மூளைத்திறனை எண்ணுந்திறனை முழுமையாகப் பயன்படுத்த உதவும் இந்த சூத்திரம். புரியாதனவற்றை புரியவைக்கும் சூத்திரம். புதியவைகளை போதிக்கும்.

முற்காலப்பெருமை பேசி, முன்னோர் படைப்புகளிலிருந்து மேற்கோள்கள் காட்டி, பழங்காலமே பொற்காலமென போற்றி பாடிக் கொண்டிருப்போரே உங்களுக்கு ஒரு வினா? நாம் காலமான பிறகு, நம் காலம் பற்றி, நமது வருங்காலம் பேசிட, மேற்கோள் காட்டிட நாம், நமது சந்ததியினருக்கு என்ன வாங்கப் போகிறோம். அத்தகு தகுதிகள் நிறைந்தவர்களாக நம்முடைய செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டுள்ளனவா? நாம் எப்போது சான்றாக வாழப்போகிறோம்?

நாம் யார்? கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடியல்லவா? நமது மதம் ! புராதன மதம். நமது மதத்தின் வழித்தோன்றல்கள் தான் சமணம் – பௌத்தம் – கிறிஸ்துவம் – இஸ்லாம் இன்ன பிற மதங்கள்.

நமது பாரம்பரிய ஞானம் ? நாலுயுக அனுபவங்கள் – நான்மறைகள் – பதினெட்டு உபநிஷத்துக்கள் – பதினெட்டு புராணங்கள் – பதினோரு மூலமுனிவர்கள் – திரிகாலம் உணர்ந்த ஞானியர் – ஈரேழு பதினாலு லோகங்கள் – பாற்கடல் – கைலாசம் – பஞ்சபூதங்களும் பகவான்கள் – அவர்கட்கு தனித்தனி புராணங்கள் – நவக்கிரகங்களுக்கு பெயர் சூட்டியதே நாம்தானே – இருபத்தேழு நட்சத்திரம் கண்ட பெயர் சூட்டி புராணம் எழுதி, அவைகளால் மனிதவர்க்கத்திற்கு உண்டாகக் கூடிய நலம் – கேடு, தோஷங்கள் கற்பித்து, தோஷநிவர்த்திக்கு பரிகாரங்கள் போதித்து, பரிகார ஸ்தலங்கள் ஸ்தாபித்து, அவைகட்கு ஸ்தலபுராணங்கள் எழுதி இப்படி விவரித்துக் கொண்டே போகலாம்.

அறுபத்தினாலு கலைகளுக்கு நாம் சொந்தக்காரர்கள் மட்டுமல்ல. அறுபத்திநாலு நாட்கள் குருகுல வாசம் – அறுபத்தி நாலு கலைகள் கற்று முடித்தவர்கள் நாம். அறுபத்தி நான்கு நாட்களில், அறுபத்திநான்கு கலைகளையும் போதிக்கவல்ல குருக்கள் இருந்தனர். கற்றுத் தேரவல்ல மாணவர்களும் இருந்தனர்போலும். இன்று? பழைமைகளை மறக்கவில்லை. புதுப்பிக்க நினைக்கவுமில்லை. ஆண்டு முழுதும் பண்டிகைகள் கொண்டாடிட நாம் தவறுவதே இல்லை, சித்திரையில் வசந்தோற்சவம் – வைகாசியில் விசாகம் – ஆனியில் திருமஞ்சனம் – ஆடிமாத அம்மன்களுக்கு கூழ் வார்த்து ஆடுகளின் மரண ஓலத்தில் நமது பக்தியை சமர்ப்பித்து, ஆவணியில் பிள்ளையாரை செய்து, பக்தியோடு – பாதுகாப்போடு கடலில் கரைத்து, புரட்டாசியில் பெருமாளுக்கு குடைபிடித்து, ஐப்பசியில் பட்டாசு வெடித்து, கார்த்திகையில் தீபம் ஏற்றி, மார்கழியில் பாவை நோன்பு நூற்று, தை மாதத்தில் மகா ஜோதியைத் தரிசித்து, மாசியில் மகம், பங்குனியில் உத்திரப் பெருவிழா நடத்தி மகிழ்ச்சியில் மிதக்கிறோம்.

இவைதவிர, பிரம்மோற்சவங்களை மிஞ்சுகின்ற அளவில் அரசியல் திருவிழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள், மாநாடுகள், நடத்தி நூற்றுக்கணக்கில் கோடிகள் கொட்டப்படுகின்றன.

இன்னும் உண்டு – திரேதாயுக நாயகன் இராமன், துவாபர யுக நாயகன் கிருஷ்ணன் இவர்கள் பிறந்த இடம் – பிறந்த நாள் – பிறந்த நேரம் – துல்லியமாக கணித்து இன்று வரை கொண்டாடுகிறோம். இதுமட்டுமா, ஆண்டவர்கட்கு – கடவுளர்க்கு, திருக்கல்யாணம் தினந்தோறும் நடத்தி மகிழ்கிறோம்.

தினப்பலன் சொல்லாத தொலைக்காட்சி உண்டா – நாளேடு உண்டா? இராகு காலம் – நல்ல நேரம் – எமகண்டம் – குளிகை – வார சூலை – ஹோரை – கிழக்கில் செல்லாதே – வடக்கில் பயணிக்காதே – என்றெல்லாம் பரிவோடு வழிகாட்டி, மனிதின் முன்னேற்றத்திற்கும் சுபிக்ஷவாழ்விற்கும் எண்ணற்ற உபாயங்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம். நூற்றாண்டுகளாக, பக்தியுடனும், சிரத்தையோடும் அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம்.

கற்றது என்ன? பெற்றது என்ன? இந்த வினா நம்மில் பலருக்கு எழவே இல்லையே ஏன்? ஆன்மீகம் நமது சொத்து. பிரத்யேக சொத்து. அதிலாவது மூழ்கி முத்தெடுத்தோமா? ஆன்மீகம் தழுவிய அறிவியல் – அறிவியல் சார்ந்த ஆன்மீகம். முதற்கண் ஆன்மீகத்தை நன்கு புரிந்து கொள்ளவேண்டும். காரணம், ஆன்மீகம்தான் இறைவனின் மூத்தமகன்.

அன்புதான் ஆன்மீகம். பணிவுதான் ஆன்மீகம். பக்திதான் ஆன்மீகம். அறம்தான் ஆன்மீகம். நல்லன அறிதல். ஆற்றுதல் தான் ஆன்மீகம். ஆன்மீகம் அனைவர்க்கும் உரித்தானது.

**அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே**
**கற்பனை கடந்த கருணைமா நிதியே (1378)**

ஆனால் இசைத்தபோது, இசைத்தவாறு, இசைத்தோர்க்கெல்லாம், இசைத்தவற்றை வழங்கிட வல்லதா ஆன்மீகம்? இவ்வழி செல்மின், இன்னது பெறலாம் என்று அறிவியல் கூற்று போல் ஒரு நிச்சயமான வழி - எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடிய, பின்பற்றக்கூடிய ஓர் வழியை நம்மால் இதுவரை சொல்லமுடிந்ததா? நமது ஆன்றோரில் பலர்/ ஆன்மீகப் பாதையில் கம்பீரமாக பயணித்து நமக்கு வழிகாட்டினார்கள். மறுக்கமுடியாத உண்மை. அவர்களை தொழக்கற்றோமே தவிர தொழுது கொண்டே அவர் சென்றவழி செல்ல தயங்குகிறோமா? மறந்துவிட்டோமா??

ஒன்றே குலம் - ஒருவனே தேவன் எனும் உணர்வு, வள்ளலார் கண்ட ஒருமைப்பாட்டு உணர்வு நமது உள்ளங்களில் இன்னும் பதியவே இல்லையே? மூத்தகுடியினரான நாம் கற்றதுதான் என்ன? பெற்றது யாவை? உலகுக்கு நாம் வழங்கியது என்ன?

அண்மையில் அத்திவரதர் தரிசனம். தரிசித்தவர்கள் ஒரு கோடிக்கும் அதிகம். இரண்டாயிரம் பணியாளர்கள் இரவு பகலாக துப்புரவுப் பணி - பாதுகாப்புப் பணியில் 10.000 காவலர்கள் - அரசுக்கு செலவு 44 கோடி. உண்டியலில் காணிக்கை 11 கோடி.

பெற்றது என்ன? நிலுவையில் உள்ள வழக்குகளில் ஒரு சதவிகிதம் விலக்கிக் கொள்ளப்பட்டதா? ஒரு சதவிகிதம் மதுப்பழக்கம் குறைந்ததா? குற்றங்கள் குறைந்தனவா? மனக்குறைகளாவது அகன்றனவா? சில குடும்பங்களிலேனும் மலர்ச்சி நிறைந்ததா? ஒன்பது பேர் உயிர் இழந்தனர்.

அக்ஷயதிருதியை - தங்கம் வாங்க வரிசையில் நிற்கிறோம். தங்கம் பெருகும் - செல்வம் செழிக்கும் எனும் நம்பிக்கை. செல்வச்செழிப்பிற்கு இப்படி ஓர் எளிய வழி உறுதிசெய்யப்பட்டால், நம்மை உலகமே கொண்டாடுமே? பொருளாதார மந்தநிலை, மந்தகாச நிலையாக உயர்ந்திருக்க வேண்டுமே? மாறாக நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் உண்மை நிலையை, உங்கட்கு புரியவைத்திடும் ஓர் புள்ளிவிவரம் தருகிறேன்.

பட்டினி அகற்றல் - நமது பெரும் பணியாக இருப்பது உண்மை. அதற்காகவே பாடுபடுவதாக உரத்த குரலில் முழங்கிக்க கொண்டு திட்டங்கள் தீட்டுகிறோம். தீட்டிக்கொண்டே இருக்கிறோம். 117 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் பட்டினி அகற்றலில் நாம் 102ஆவது இடத்தில் இருக்கிறோம்.

நமக்கு பின்னால் சுதந்திரம் பெற்ற சீனா 25வது இடத்திலும். அண்டை நாடான பாகிஸ்தான் 94வது இடத்திலும் இருக்கின்றன.

பட்டினி போக்கிட நாம் இப்போது வேறு சிறந்த வழிகளில் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறேன். அண்மையில் அயோத்தியில் நடந்த பிரமாண்ட தீபத்திருவிழா - ஒளி - ஒலிக் காட்சிகள் பிரமிக்க வைத்தன. இதிகாச நாயகன் இராமனிடம் நமது பக்தியை - சரணாகதியை அர்ப்பணிப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இதுமட்டுமா? இராமர் பிரமாண்ட சிலைவடிவில் 250 மீட்டர் - 750 அடி நம்முடனே இருக்கப்போகிறார். இவையாவும் நடந்து கொண்டிருப்பவைகள் எனது கற்பனை சித்தரிப்புகளல்ல. பட்டினி பறந்திடும் - நோய்கள் நீங்கிடும் - குற்றங்கள் மறையும் - கவலையை விட்டொழியுங்கள்!

புள்ளிவிவரத்தை தொடர்கிறேன். சிறார் பராமரிப்பில் நாம் எங்கிருக்கிறோம் தெரியுமா? நமது 20.8 சதவிகித சிறார்கள் பராமரிப்பின்றி நலிந்து. ஆதரவின்றி வீதியிலோ விடுதிகளிலோ, கொத்தடிமைகளாகவோ ஏங்கித் தவிக்கிறார்கள். புத்ர காமேஷ்டி யாகம் செய்து சத்புருஷர்களை ஈன்ற புண்யபூமியல்லவா இது ! இன்று நமது சிறார்களின் சீர்குலைவு ஏன்? அசுவமேதயாகம் செய்து வெற்றிமாலை சூடிய மாமன்னர்கள் வாழ்ந்த பூமியல்லவா இது! நம்மிடமிருந்த அறிவு, திறன், ஆற்றல், அஸ்திரப் பயிற்சி யாவும் எங்கே ? அலெக்ஸாண்டரில் ஆரம்பித்த ஆக்ரமிப்பு, ஆங்கிலேயன் காலத்தில் முழுமையடைந்து அடிமைகளாக ஆக்கப்பட்டோமே ! வீறுகொண்டு மீண்டும் எழுந்த நாம் முன்னெடுக்க வேண்டியவைகள். அறியாமை அகற்றல் - பட்டினி அகற்றல் அல்லவா? நமது வருங்காலத்தை நிர்ணயிக்கவல்ல நமது சிறார்களின் பராமரிப்பில் சிறப்பு கவனமல்லவா இருக்கவேண்டும்.

நாம் நிகழ்காலத்துக்கு வருவோம். இன்று நாம் காணும் அவலங்கள் - மனிதரிடையே பகைமை. மதங்களிடையே பகைமை. நாடுகளிடையே பகைமை. தகைமையும் தயவும் ஒதுக்கப்பட்டுவிட்டன.

படமாடும் பரமனுக்கு அங்கு ஈயில்
நடமாடும் நம்பனுக்கங்கு ஆகா
நடமாடும் நம்பனுக்கொன்று ஈயில்
படமாடும் பரமனுக்கங்கு ஆமே

திருமூலர் வாக்கு மறந்துவிட்டோம். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த அருட்பிரகாசர், ஆன்மநேயசித்தர், வாடிய பயிரைக் கண்டதும் உள்ள வாடி, நெகிழ்ந்து நெகிழ்ந்து நீர் சொரிந்த, நமது வள்ளலார் வற்புறுத்திய மாமருந்தான மனிதநேயத்தை மறக்கலாகுமா? நமது இன்றைய அவசியத் தேவை, தெளிவும் தேடலும் மட்டுமே. திரவியம் அல்ல. நம்மில் 20 சதவிகிதம் பராமரிப்பின்றி பட்டினியால் வாடும் போது நமக்கு பூங்கொத்தும், பொன்னாடையும் தேவைதானா? ஆதரவற்றவன், அனாதை என்று ஒரு சிலர் இருக்கும்வரை நமக்கு ஆடம்பரம் தேவையற்றது தான். இலவச மறுப்புக்கு நமது மக்களைத் தயார் செய்வோம். ஏற்பது இகழ்ச்சி எனும் எண்ணம் ஒவ்வொரு மனிதன் மனதிலும் உருவாகிவிட்டால் அங்கே வறுமை அகலும். பகிர்தலில் நேர்மை நிலவும். நாடு நாடா வளத்தது ஆகும். புஷ்பகவிமானம் இருந்திருக்கலாம். அது திரேதாயுகம். ஆனால், விமானம் பறப்பதை நாம் கண்கூடாக பார்த்தது, சென்ற நூற்றாண்டில் தானே? ரைட் சகோதரர்களின் சாதனைதானே? பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் துவங்கிய தொழில்புரட்சி, அறிவியல் முன்னேற்றம், உலகுக்கு வழங்கியவைகளை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். மின்சாரம் துவங்கி செயற்கை நுண்ணறிவு வரை விஞ்ஞானிகளின் சாதனைகள் - தொடர்ந்தவண்ணம் உள்ளதனவல்லவா? நமது பங்களிப்பு ?? தொடர்ந்து எழுதிட தேவை, தங்கள் விமர்சனம்!



இலட்சுமணசாமி
இராணிப்பேட்டை
08056438488

**நற்குண நிதியே சற்குண நிதியே**
**நிற்குண நிதியே சிற்குண நிதியே (1380)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் நித்ய தீப தருமச்சாலையில் அன்போடு தயாரித்த இனிப்புகளையும் (லட்டுகள்) கார வகைகளையும் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு தேடி சென்று கொடுத்த காட்சி...**















**பளகிலாது ஓங்கும் பளிக்குமா மலையே**
**வளம்எலாம் நிறைந்த மாணிக்க மலையே (1382)**

**நித்ய தீப தருமச்சாலை வளாகத்தில் தினசரி பசியாற்றுவித்தலுக்கு காய்கறிகளை நறுக்கும் பணியில் தீபம் சேவடிகள்...**



**தீபம் அறக்கட்டளையின் தலைமகனும், தவப்புதல்வனும்...**



**மதியுற விளங்கும் மரகத மலையே**
**வதிதரு பேரொளி வச்சிர மலையே (1384)**

## மாதாந்திர சொற்பொழிவு

22



நித்ய தீப தருமச்சாலையில் நடைபெற்ற மாதாந்திர சொற்பொழிவு.
சொற்பொழிவாளர் திரு. மகாதேவன், ஜமீன்பல்லாவரம் – நாள் : 02.11.2019

# அடுத்த மாத சன்மார்க்க சொற்பொழிவு

23

## நித்ய தீப தருமச்சாலையில்

## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம் (சொற்பொழிவு)

நாள் : 7.12.2019 (சனிக்கிழமை) / நேரம் : மாலை 6.00 மணி முதல் இரவு 8 மணி வரை.

தலைப்பு : **"சன்மார்க்கத்தின் தேவை"**

சொற்பொழிவாளர் : சன்மார்க்க இளவல்
தயவுமிகு **D. சகாதேவன்** அவர்கள்
இசை ஆசிரியர், வேளச்சேரி.



இடம் : **நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி,
சென்னை – 600 042.
செல் : 9444073635 / 22442515

**உரைமனம் கடந்தாங்கு ஓங்குபொன் மலையே**
**துரியமேல் வெளியில் ஜோதிமா மலையே (1386)**

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 13 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான**
**பசியால் வாடும் வறியவர்களுக்கு, பல்வேறு தருமச்சாலைகள் மூலம்**

## ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம்பாலிப்பு



**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கின்றோம்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ.3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ.5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ.6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| அனைத்து தருமச் சாலைகளிலும்அன்னமளிக்க | ரூ.20, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ.2,00,000/- |

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**முன்பதிவிற்குத் தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

**வங்கி பரிமாற்ற தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.**

**புற்புதம் திரைநுரை புரைமுதல் இலதோர்**
**அற்புதக் கடலே அமுதத்தன் கடலே (1388)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 42. ஆதி சிற்சபை

83. ஓதிநின்றுணர்ந்துணர்ந் துணர்தற் கரிதாம்
84. ஆதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) அருட்ஜோதிக் கடவுளும் அவரது சிற்சபையும் அனாதி என்று முன் அடிகளில் குறிக்கப்பெற்றன. அதுவே உண்மை என்றும் கண்டோம். ஆனால் அதே சிற்சபை ஆதி என்று குறிக்கப்படுகின்றது. இங்கு இது மாறுபாடுபோல் தோன்றலாம். உண்மையில் மாறுபாடல்ல என்பதும், வேறுபாட்டு அனுபவத் தோற்றமே என்பதும் சுத்தசத் விசாரத்தில் கண்டு தெளியப்படுகின்றதாம். ஆகவே அந்த உண்மை விளக்கத்தை ஓர்ந்து கொள்ளுவோம்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், அனாதியாகவே என்றென்றும் எங்கும் நிரம்பியுள்ளவர் என்பது உண்மைதான். என்றாலும். அப்படியுள்ளது அவ்வனாதி பரம்பொருள் என்ற உண்மை விளக்கம், பக்குவ மனிதனின் பகுத்தறிவுக்கு அப்பாலான மெய்யறிவில்தான் வெளியாகி விளங்குகின்றதாம். அதாவது, அவவனாதி வஸ்துவின் உண்மை கொண்ட ஒரு சிற்றணுவே இம்மனிதப் பிறப்பில் ஆதி முதலிடம் பெற்றுச் சிற்றம்பலம் எனத் திகழ்கின்றதாம். இச் சிற்சபையைத் திருவருள் வலத்தால் சார்ந்து நிற்கும் மனிதனே, அருட்பெருஞ்ஜோதியைக் காண வல்லவனாகின்றான்.

சுத்த சன்மார்க்கச் சாதகன் சத்விசாரத்தால், தான் இப்போது ஏற்றுள்ள தேகநிலை கடந்து, உள் நின்று. ஒளிர்கடவுளான்ம அணுவடிவினனாகத் திருவருளால் உணர்த்தப்பெற்றிருக்கின்றான். இச்சிற்றணுவுருவே இம்மனிதனின் இயல் வடிவமாகப் பண்டே தொட்டு இருந்து வருவதாயும், பல்வேறு உயிரினவடிவச் சூழலிலும். தன்னைத்தான் அறிந்துகொள்ளமுடியாது கிடந்து வந்து, இப்பொழுது இந்த மனிததேகச் சூழலில்தான் இச்சமயம் இத் தனது இயல் உண்மையைக் கண்டுகொண்டுள்ளான். ஆதலின். இவனது ஆதியான முதல்வடிவம் அந்தக் கடவுள் சிற்றணுவே என்பது தெளிவு. மேலும் அக்கடவுளணுவேதான் மனித கருப்பிண்ட சிருஷ்டியில் முதன் முதலில் தோற்றி ஒளிரச் சூழுருவேற்றுச் சுடர்விட்டிலங்கிக் கொண்டிருக்கின்ற சிரநடுச் சிற்றம்பலமாம். இதனால் இது ஆதி சிற்சபை எனப்படுகின்றது.

திருவருளால் தன்னை ஆதி சிற்சபையில் கண்டு கொண்ட மனிதன். அச்சிற்சபேசனை அடைந்து நித்திய வாழ்வு பெறுவதற்கு எவ்வளவு காலம் முயன்று ஓதியும், ஏகதேசம் உணர்ந்தும் பயனுறாது கிடந்துவந்தான். இதுவே இங்கு குறிக்கப்பட்ட அறிவரிய அருட்பெருஞ்ஜோதி வளர் சிற்சபையின் உண்மையாகும். மேல் சிற்சபையுற்று நிற்கும் சன்மார்க்கி அருள்நிறை வாழ்வு பெறும்போது. தன் ஆதிநிலையைக் கடவுளரின் அனாதி நிலையாக ஆக்கப்பெற்று அழிவற்ற அருளின்ப வடிவில் திகழ்கின்றவனாகின்றான். ஆதியான ஒன்றுக்கு அந்தம் உண்டு. ஆகவே. அனாதிக்கு அந்தமுமில்லையாம். இம் முடிவற்றிலங்கும் பேரின்ப வாழ்வைக் குறிக்கோளாய் ஏற்கச்செய்வது இவ் அகவல்.

**இருட்கலை தவிர்த்தொளி எல்லாம் வழங்கிய**
**அருட்பெரும் கடலே ஆனந்தக் கடலே (1390)**

## நித்ய தீப தருமச்சாலையில் பசியாற்றுவித்தலுக்கு முன் தினமும் அன்னம் தரும் நன்கொடையாளர்களுக்கு பிரார்த்தனை!





## வேளச்சேரி திரௌபதி அம்மன் கோயில் பக்தர்களுக்கு தீபம் அறக்கட்டளை அன்ன பிரசாதம் வழுங்குதல்...



பவக்கடல் கடந்துநான் பார்த்தபோது அருகே
உவப்புறு வளங்கொண்டு ஓங்கிய கரையே (1392)

# இடது கை



வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல் இருப்பது தருமம். தீபம் அறக்கட்டளையென்னும் நிலைக் கண்ணாடியில் நீங்கள் கொடுத்த தருமத்தை இடது கை என்ன செய்தது என்பதை கண்ணாடி காட்டுகிறது.

## கடந்த 13 ஆண்டுகளில் ...

| | |
|---|---|
| உங்களால் பசிக்கு உணவு பெற்றவர்கள் | 75 லட்சம் பேருக்கும் மேல் |
| வசதி குறைந்த காப்பகங்கள், தானே / வர்தா புயல் நிவாரணம், / கஜா புயல் போன்றவற்றிற்கு நீங்கள் தந்த அரிசி | 50 டன் |
| உங்களால் கல்வி உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஜுலை 2019 வரை | 995 பேர் |
| நீங்கள் அளித்த கல்வி உதவித் தொகை | ரூ. 53,87,185/- |
| மார்கழி மாதக் குளிரில் சுருண்டு புரட்டை தலையுடன் ரோட்டோரம் தரையில் படுத்திருந்தவர்களை பாதி இரவில் எழுப்பி நீங்கள் அளித்த போர்வைகள் மற்றும் புத்தாடைகளின் எண்ணிக்கை | 15,000-க்கும் மேல் |
| ஏழைகளின் நோய் தீர மருத்துவ உதவியாக நீங்கள் வழங்கிய தருமம் | ரூ. 40 லட்சத்திற்கும் மேல் |
| தீபநெறி மாத இதழ் உங்களால் வெளியிடப்படுவதை விரும்பிப் பெறுவோர் | இதுவரை 4,50,000 பிரதிகள் |

**பணம் கொடுத்தது - உங்கள் வலது கை**
**புள்ளி விவரம் தருவது - உங்களது இடது கை (தீபம் அறக்கட்டளை)**

## தருமம் செய்வோம்! தயவுடன் வாழ்வோம்!!

**என் துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்துளம்**
**நன்றுற விளங்கிய நந்தனக்காவே (1394)**

# Deepam Trust - Donation Form

After Reading the Sccial Activities of Deepam Trust, I would like to Donate a sum of Rs..................by cheque / demand draft / money order / bank transfer towards the following social activities.

**1) Annadanam** ☐ **2) Rice** ☐ **3) Provision** ☐

**4) Eduction** ☐ **5) Medical Help** ☐ **6) Building Fund** ☐

Name : Sri / Smt / Dr.......................................................................

Address ......................................................................................

City..................................State.........................Pin..........................

Mobile :...............................Email.................................................

Birth Day...............................Wedding Day.......................................

Deepam Trust was referred by : ......................................................

Donor's signature.............................Date :.....................................

==============================================================

1st Time Donor: (Please tick) ☐ Aleady Donated : ☐

Do you get our Newsletter **"Deepa Neri"** ? - Yes / No ( Pl. tick )

==============================================================

For Money Transfer : DEEPAM TRUST
State Bank of India, IIT Branch
Current A/c No. : 30265475129 / IFS Code : SBIN0001055

==============================================================

Note : Demand Draft / Cheque in favour of **"Deepam Trust"**
Address ; Deepam Trust, No. 30, Droupathi Amman koil Street, (Next to Mosque), Velachery, Chennai - 600 042 Mobile : 94440 73635
www.deepamtrust.org


**DONATIONS ARE EXEMPTED UNDER 80G OF INCOME TAX**

சேற்றுநீர் இன்றிநல் தீஞ்சுவை தரும்ஓர்
ஊற்றுநீர் நிரம்ப உடையபூந் தடமே (1396)

# பார்வையற்ற குடும்பங்களுக்கு மாதாந்திர உதவி...



ரயிலில் பொருள் விற்று குடும்பம் நடத்தும் அயனாவரத்தை சேர்ந்த
பார்வைற்ற செல்வம் குடும்பத்திற்கு மாதந்தோறும் வாழ்வாதார உதவி..



சென்னை அனகாபுத்தூரை சேர்ந்த ஆதவற்ற விதவை தாய்
திருமதி. டில்லிபாய் மகன், திரு. சேகர் அவர்களுக்கு டயாலிஸிஸ்
மருத்துவ உதவி மாதந்தோறும் ரூ.5000 தருதல்..

RNI : TNTAM / 2010 / 35284
"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO. TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
R.No.TN/CC(S)Dn/412/17-19
Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.
**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**



## கொடுப்பதே இன்பம்! பேரின்பம்!!

வருடந்தோறும் தீபவளியை முன்னிட்டு ஆதரவற்ற காப்பகங்களுக்கு தர தயாராக உள்ள இனிப்புகளின் கண்கொள்ளா காட்சி.



## தொண்டே கடவுள்!

இனிப்புகள் தயாரிக்கும் தொண்டில் தீபத்தின் சேவடிகள்.

If undelivered Please Return to:
**DEEPAM TRUST**
(REDG. No. - 2035/07)
#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.org
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-11-2019
Egmore, Chennai - 8